14th February 1958]

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இத்தகைய கைக்குத்தல் அரிசியை மக்கள் உண்பதற்கு அதன் தரத்திற்காக அது போற்றப்படுகிறதா? அல்லது ஒரு தொழிலாகக் கருதி போற்றப்படுகிறதா? நியாயவிலைக் கடைகளில் கைக்குத்தல் அரிசியைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தரத்திற்காகவும் வற்புறுத்தப்படுகிறது. மேலும் கைக்குத்தல் அரிசியில் சத்து இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதியாகவுள்ள நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்குகிறது என்ற அடிப்படையிலும் கைக்குத்தல் அரிசி போற்றப்படுகிறது.

SRI M. K. SOMASUNDARAM: கைக்குத்தல் அரிசித் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மற்ற மில்களுக்கு லைசென்சு கொடுக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவு போட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது அப்படிச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இல்லை. கைக்குத்தல் அரிசித் தொழிலில் போட்டியும் இருந்து, நியாயவிலைக் கடைகளில் வாங்குவாரும் அதிகமாகி அந்த அரிசிக்கு நெருக்கடி உண்டானால் அதைப்பற்றி கவனிக்கலாம். இப்போது அம்மாதிரி இல்லை. சர்க்கார் ஸ்தாபனங்களில் கைக்குத்தல் அரிசி உபயோகப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY: இந்தக் கைக்குத்தல் அரிசி தேக ஆரோக்கியத்திற்கு நல்லது என்று கருதுவதால் சர்க்கார் நடத்துகின்ற ஆஸ்பத்திரியில் எல்லா இடங்களிலும் வழங்குவதற்கு சர்க்கார் யோசிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு சர்க்கார் செய்துகொண்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM: கைக்குத்தல் அரிசியையும், மில் அரிசியையும் ஒன்றாக வளர்ப்பது என்பது சாத்தியம் அல்ல. சிங்கத்தையும் ஆட்டையும் ஒரு கூட்டில் அடைப்பது மாதிரி. மில்லை அடியோடு கட்டுப்படுத்த முடியாது என்றாலும் மின்சார நெருக்கடியின் காரணமாக வைத்துக்கொண்டு அம்மில்கள் வேலை செய்கிற நேரத்தைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா? இதனாலும் மில் அரிசி உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் சொல்லும் யோசனை நல்ல யோசனை. இதை இப்போது அமுலுக்கு கொண்டுவந்தால் பஞ்சம் ஏற்பட்டுவிடும்.

SRI S. LAZAR: How is the response from the consuming public in the matter of taking to hand-pounded rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: My own experience has been only those who are confined in jails and hospitals are taking to this. But people outside are not taking to this as freely as one would expect them to do.

State Bank of India

* 109 *Q*.—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of branches of the State Bank of India in our State;

(*b*) the volume of business transacted by the Government through these Banks; and

[14th February 1958

(*c*) the relationship between the Government and these Banks?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Forty-one as on 1st January 1958.

(*b*)—

Year.	Receipts.	Disbursements.
	Rs. IN LAKHS.	Rs. IN LAKHS.
1955	53,00	39,84
1956	61,93	46,07

(*c*) According to section 21 of the Reserve Bank of India Act, 1934, the Reserve Bank of India are the Bankers of the Government. With reference to section 45 of the Reserve Bank of India Act, 1934, read with the third schedule thereto, the State Bank of India are the sole agents of the Reserve Bank of India at all places where there is a branch of the State Bank of India, and where there is no branch of the banking department of the Reserve Bank of India. The State Bank do Government cash business as agents of the Reserve Bank of India. The Reserve Bank of India pay commission to the State Bank of India at the following scale calculated on the total of receipts and payments dealt with on Government account for the quinquennium 1st April 1955 to 31st March 1960 :—

On the first Rs. 600 crores	0·06	of one per cent.
On the next Rs. 600 crores over Rs. 600 crores.	0·04	,,
On the next Rs. 1,200 crores over Rs. 1,200 crores.	0·02	,,
On the remainder	0·01	,,

SRI P. G. MANICKAM : ஸ்டேட் பாங்கின் மூலமாக விவசாயிகளுக்கு அவர்கள் செய்யும் பயிர்களை ஈடுவைத்து கடன் கொடுக்க ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது எந்த முறையில் நடைபெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்டேட் பாங்கின் மூலமாகச் செய்யப்படவேண்டுமா ? என்கிற சர்ச்சை தீர்ந்து ரிசர்வ் பாங்கு மூலமாகச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal to extend these branches to all taluk headquarters?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is a proposal under consideration to open branches in 17 more places. I think these may cover some of the taluk headquarters also.

SRI R. SRINIVASA IYER : Now that the State Bank branches opened in almost all places where there are sub-treasuries, is there any proposal to transfer or take over experienced shroffs in treasuries to the State Bank branches?

14th February 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think we can interfere with the recruitment of staff in the State Bank of India. That is a free institution and I do not think we can impose our own staff on it.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, கிராமாந்திரக் கடன் வசதிகளைப் பெருக்குவதற்கு இப்போது ஸ்டேட் பாங்கின் மூலமாக வசதி செய்யப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Tuberculosis Sanatorium

* 110 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9 a.m.

(*a*) whether he visited recently the newly built Tuberculosis Sanatorium at Caper Quarry at Cuddalore;

(*b*) whether the Government have received any representation for the grant of any subsidy for its maintenance; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) The matter is under consideration.

SRI A. GOVINDASAMY : இதை பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆஸ்பத்திரியை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் உடனடியாக நிதி அளிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஆஸ்பத்திரியின் செலவு விஷயமாக ஜில்லா கமிட்டி, "ரெக்கரிங், நான்-ரெக்கரிங்" என்று புள்ளி விவரங்கள் அனுப்பியிருக்கிறார்கள். "டைரைக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ்" அனுப்பிய புள்ளி விவரம் அதிகமாகயிருக்கிறது. கட்டிடங்களை ஒரு இஞ்சினியர் பார்வையிட்டு "ரிப்போர்ட்" செய்யும்படிக் கேட்டிருக்கிறோம். நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னையில் ஒரு ஐரோப்பிய க்ஷய ரோக நிபுணர் வந்திருப்பதாகவும், தீராத க்ஷயரோக வியாதிகளைத் தீர்த்து வைப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவர் மூலமாக எத்தனை நோயாளிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது ?

MR. SPEAKER : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

THE HON. SRI M. A. MANICKAVELU : தென் ஆற்காட்டுக்கு அவர் வரவில்லை.

Silk Weavers' Co-operative Society

* 111 *Q.*—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Deputy Registrar of Co-operative Societies, Salem, has received recently any application from the Silk Weavers' Co-operative Society, Chinthamaniyur village, Omalur taluk, Salem district, for registration; and

(*b*) if so, the action taken thereon?